தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-2272060 9443699066


admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்

கனி பிரின்டிங்
DTP
நாளிதழ் வார இதழ் மாத இதழ்
சிறந்த முறையில் (DTP) செய்து தரப்படும்
நாளிதழ் மந்திலி மேகஸிங் குறைந்த விலையில் பிரின்டிங் செய்து தரப்படும்
தொடர்புக்கு : 94436 99066

மலர்:03 இதழ்:248 4 பக்கங்கள் 06:04:2026 திங்கட்கிழமை விலை ரூ,6 வருடசந்தாரூ,1825



அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

**விளக்கம்:**
அருள் இல்லாதார்க்கு மேலுலகமுறுங் காட்சியில்லை; பொருள் இல்லாதார்க்கு இவ்வுலகின்கண் இன்பமுறுங்காட்சி யில்லையானாற்போல. இஃது அருளில்லாதார் சுவர்க்கம் புகாரென்றது.

## "படம் இன்னும் முடியவில்லை" - பஞ்சாப் ஆம் ஆத்மி குற்றச்சாட்டுக்கு ராகவ் சத்தா பதில்



புது டெல்லி: ஏப்:06

பஞ்சாப் தொடர்பான பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் எழுப்பவில்லை என்ற ஆம் ஆத்மி கட்சியினரின் குற்றச்சாட்டுக்கு, பஞ்சாப் சார்ந்த விவகாரங்கள் குறித்து மாநிலங்களவையில் தான் எழுப்பிய கேள்விகள் அடங்கிய காணொலியை மாநிலங்களவை எம்.பி ராகவ் சத்தா வெளியிட்டுள்ளார்.இதுகுறித்து ராகவ் சத்தா வெளியிட்ட காணொளியில், பஞ்சாப் சார்ந்த பிரச்சினைகள் குறித்து நான் மாநிலங்களவையில் ஆற்றிய உரைகளின் தொகுப்பை வெளியிடுகிறேன். இதில், நான் கானா சாகிப் வழித்தடத்தை அமைக்குமாறு வலியுறுத்தியது, விவசாயிகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டரீதியான உத்தரவாதங்களைக் கோரியது, பகத் சிங்கிற்கு பாரத ரத்னா விருது வழங்கப் பரிந்துரைத்தது மற்றும் மகாராஜா ரஞ்சித் சிங்கின் அரச சிம்மாசனத்தைத் திரும்பப் பெறுமாறு கோரியது உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இக்காணொளியுடன் அவர் வெளியிட்ட பதிவில், "ராகவ் சத்தா நாடாளுமன்றத்தில் பஞ்சாப் பிரச்சினைகளை எழுப்பத் தவறிவிட்டார் என்று குற்றம்சாட்டி என்னை இதுபோன்ற ஒரு காணொளியை வெளியிடும் நிலையை உருவாக்கிய எனது ஆம் ஆத்மி கட்சி சகாக்களே, இதோ உங்களுக்காக ஒரு சிறிய முன்னோட்டம், படம் இன்னும் முடியவில்லை. பஞ்சாப் என்பது எனக்கு வெறும் பேச்சுப் பொருளோ அல்லது விவாதப் பொருளோ அல்ல. அதுவே எனது வீடு; அதுவே எனது கடமை; அதுவே எனது மண்; அதுவே எனது ஆன்மா" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஆம் ஆத்மி தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கேஜ்ரிவால் உள்ளிட்ட கட்சித் தலைமையுடன் பல மாதங்களாக நிலவி வந்த மோதல்போக்கு காரணமாக, கடந்த வாரம் ராகவ் சத்தா ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதன் பிறகு, ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர்களுடன் ராகவ் சத்தா கடுமையான வார்த்தைப் போரில் ஈடுபட்டு வருகிறார். இந்த சூழலில், மாநிலங்களவையில் பஞ்சாப் மாநிலம் சார்ந்த பிரச்சினைகளை ராகவ் சத்தா எழுப்பவில்லை என்று பஞ்சாப் ஆம் ஆத்மி தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## குளச்சல்: கடலோர நிர்வாகிகளுடன் காங்கிரஸ் வேட்பாளர் ஆலோசனை




குளச்சல் சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் தாரகை கத்பர்ட், கன்னியாகுமரி மாவட்ட கடலோர மக்கள் வளர்ச்சி மன்ற அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றார். மீனவ மக்களின் முன்னேற்றம் குறித்து மன்ற நிர்வாகிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார். இக்கூட்டத்தில் கடலோர மக்கள் வளர்ச்சி மன்ற நிர்வாகிகள், காங்கிரஸ் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில், சமூக ஆர்வலரும் வழக்கறிஞரும் ஆகிய வே.பார்த்திபன் அவர்கள் இன்று தேர்தல் நடத்தும் அலுவலர் பெ.ராஜேந்திரன் அவர்களிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். வேட்பு மனு தாக்கலின் போது வழக்கறிஞர் சுடலைமணி, சிங்கிலிபட்டி மகேந்திரன், அசுபதி ஆகியோர் உடன் இருந்தனர்

# தமிழகத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாள் இறுதி வேட்பாளர் பட்டியல் ஏப்.9-ல் வெளியீடு

சென்னை: ஏப்,06

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது. இதுவரை 3,430 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், எடப்பாடியில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, தருமபுரியில் சவுமியா அன்புமணி உள்ளிட்டோர் இன்று வேட்புமனு தாக்கல் செய்கின்றனர். மனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறுகிறது. இறுதி வேட்பாளர் பட்டியல் ஏப்.9-ம் தேதி வெளியாகிறது.தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 234 தொகுதிகளிலும் ஒரேகட்டமாக ஏப்.23-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு கடந்த மார்ச் 15-ம் தேதி வெளியானது. இதையடுத்து, அன்றைய தினமே தமிழகம் முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வந்தன. தலா 2,106 தேர்தல் பறக்கும் படைகள், நிலைக் கண்காணிப்பு குழுக்கள் 24 மணி நேரமும் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றன. ஆண்கள், பெண்கள், மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 5.69 கோடி பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.இந்த நிலையில், அனைத்து தொகுதிகளிலும் கடந்த மார்ச் 30-ம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கியது. முதல்வர் ஸ்டாலின், தவெக தலைவர் விஜய், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோர் முதல் நாளிலேயே வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர். பல்வேறு கட்சிகளின் வேட்பாளர்கள், சுயேச்சைகள் உட்பட முதல் நாளில் மொத்தம் 867 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.மார்ச் 31 (மகாவீர் ஜெயந்தி), ஏப்.1 (வங்கி விடுமுறை), ஏப்.3 (புனித வெள்ளி), ஏப்.5 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய 4 நாட்கள் பொது விடுமுறை



என்பதால் மனு தாக்கல் நடைபெறவில்லை. அந்த வகையில், இதுவரை 3 நாட்கள் மட்டுமே வேட்புமனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதுவரை 3,430 மனுக்கள் இதில் 2,731 ஆண்கள், 698 பெண்கள், மூன்றாம் பாலினத்தவர் ஒருவர் என மொத்தம் 3,430 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதிகபட்சமாக கரூர் தொகுதியில் 84 மனுக்கள், பர்கூர் தொகுதியில் 29 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. குறைந்தபட்சமாக மானாமதுரை, நிலக்கோட்டையில் தலா 5 மனுக்களும், காட்டுமன்னார்கோவில், திருவாரூர், பேராவூரணி, கந்தர்வகோட்டை ஆகிய தொகுதிகளில் தலா 6 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சென்னையில் இதுவரை 282 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதில் அதிகபட்சமாக தியாகராய நகர்தொகுதியில் 28 மனுக்கள், குறைந்தபட்சமாக ஆயிரம் விளக்கு தொகுதியில் 7 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், தேர்தல் அறிவிக்கையில் கூறியபடி அனைத்து தொகுதிகளிலும் வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது. இன்று ஒரு நாள் மட்டுமே அவகாசம் இருப்பதால், தமிழகம் முழுவதும் அதிமுக, பாஜக வேட்பாளர்கள், கடைசி நேரத்தில் அறிவிக்கப்பட்ட மதுரை மேலூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் விஸ்வநாதன் உள்ளிட்டோர் இன்று மனு தாக்கல் செய்கின்றனர்.அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, எடப்பாடி தொகுதியிலும், பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி, தருமபுரி தொகுதியிலும் மனு தாக்கல் செய்கின்றனர். இன்று மாலை 3 மணி வரை வேட்புமனுக்கள் பெறப்படும். நாளை மனுக்கள் பரிசீலனை: இதைத் தொடர்ந்து, நாளை காலை 11 மணிக்கு, அனைத்து தொகுதிகளிலும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தலைமையில் வேட்புமனுக்கள் பரிசீலனை நடைபெறும். ஏற்கப்பட்ட, தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் விவரம் நாளை மாலை வெளியாகும். வேட்புமனுக்களை திரும்பப்பெற ஏப்.9-ம் தேதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அன்று இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டு, சுயேச்சை வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கப்படும்.வாக்குப்பதிவு இயந்திரங்களில் பெயர், சின்னங்களைப் பொருத்தும் பணிகள் ஏப்.10-ம் தேதி முதல் தொடங்க உள்ளன. வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடு வீடாக பூத் ஸ்லிப் வழங்கும் பணிகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை அந்தந்த மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.10-ம் தேதி முதல் பிரச்சாரம் மேலும் சூடுபிடிக்க உள்ளது. அந்தந்த தொகுதிகளுக்கென நியமிக்கப்பட்டுள்ள செலவினப் பார்வையாளர்களும், வேட்பாளர்களின் செலவினங்களை தீவிரமாக கண்காணிக்க உள்ளனர். தேர்தல் விதிமீறல் தொடர்பாக 'சி-விஜில்' செயலியில் தெரிவிக்குமாறும், வேட்பாளர்கள் மீதான குற்ற வழக்குகள் மற்றும் கல்வித் தகுதி தொடர்பாக இசிஐ நெட் போர்ட்டலில் தெரிந்துகொள்ளுமாறும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.பிரச்சாரம் ஏப்.21-ம் தேதிமாலை 6 மணியுடன் நிறைவடைகிறது. அது முதல் தேர்தல் நாளான ஏப்.23 மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடியும் வரையிலான 48 மணி நேரம் அமைதி காலமாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த கால கட்டத்தில் பிரச்சாரம் மேற்கொள்ளவும், தொலைக்காட்சிகளை வைத்து காட்சிப்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. வாக்குப்பதிவுக்காக 75,032 வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளை மாவட்டதேர்தல் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். வாக்குஎண்ணும் மையங்களை அமைக்கும் பணியும் நடந்து வருகிறது.தேர்தல் நாளில் பொது விடுமுறை அறிவித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தினக்கூலி, ஒப்பந்த தொழிலாளர்கள் உட்பட அனைத்து விதமானதொழிலாளர்கள், பணியாளர்களுக்கும் அன்று ஊதியத்துடன் விடுப்பு அளிக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

## ரூ.50 ஆயிரம் செலுத்திய 60 பேருக்கு திருப்பி தர மாட்டோம் தேர்தலில் போட்டியிடாத மநீம விளக்கம்




விருப்ப மனு கட்டணம் ரூ.50 ஆயிரம் திருப்பித் தரக்கூடியது அல்ல. 60 பேர் கட்டிய விருப்பமனு தொகை கட்சி நிதிக்கு சென்று விட்டது என்று மக்கள் நீதி மய்யம் நிர்வாகிகள் விளக்கம் அளித்தனர்.தேர்தலில் போட்டியிட விரும்பும் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளிடம் கட்சி சார்பில் விருப்ப மனு கட்டணம் பெறப்படுவது வழக்கம். அந்த வகையில், திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் விருப்ப மனு கட்டணம் ரூ.50 ஆயிரம் என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கும் என்று கருதி மநீம தொண்டர்கள், நிர்வாகிகள் 60 பேர் விருப்ப மனு கட்டணம் செலுத்தினர்.ஆனால், திமுக தொகுதி பங்கீட்டுக் குழுவுடன் 3 சுற்று பேச்சுவார்த்தை முடிவடைந்த நிலையில் கட்சியின் சொந்த சின்னத்தில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காததால் தேர்தலில் கட்சி போட்டியிடவில்லை என்று மநீம தலைவர் கமல்ஹாசன் அறிவித்தார்.இதனால், தேர்தலில் போட்டியிடலாம் என்று விருப்ப மனு கட்டணம் செலுத்திய கட்சி நிர்வாகிகளும் தொண்டர்களும் அதிர்ச்சி அடைந்தனர். இந்த சூழலில், மநீம தேர்தலில் போட்டியிடாததால் விருப்ப மனு கட்டணத்தை திருப்பித்தர வேண்டும் என்று கட்டணத்தை செலுத்திய நிர்வாகிகள் கோரிக்கை வைத்துள்ளதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாயின. இதுதொடர்பாக மநீம நிர்வாகிகளிடம் கேட்டபோது, "விருப்ப மனு கட்டணம் என்பது திருப்பித்தரக்கூடிய கட்டணம் அல்ல (Non--refundable) என்பதும் அந்த கட்டணம் கட்சி நிதியாக கருதப்படும் என்பதும் அனைவருக்கும் நன்கு தெரியும். அந்த வகையில், தேர்தலில் கட்சி சார்பில் போட்டியிட 60 பேர் விருப்ப மனு கட்டணம் செலுத்தியிருந்தனர். அந்த கட்டணம் கட்சி நிதிக்கு சென்றுவிட்டது. விருப்ப மனு கட்டணம் செலுத்திய எந்த தொண்டரும், நிர்வாகியும் அதை திரும்ப தருமாறு கட்சி தலைமையிடம் எந்த கோரிக்கையும் வைக்கவில்லை. ஆனால், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் திட்டமிட்டு இதுதொடர்பாக தவறான தகவல்களை பரப்புகிறார்கள்" என்று விளக்கம் அளித்தனர்.

## மடத்துக்குளம் அமமுக வேட்பாளர் சொத்து மதிப்பு



திருப்பூர் :ஏப்,06

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் அமமுக வேட்பாளர் சி. சண்முகவேலு நேற்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். அவர் தாக்கல் செய்த வேட்புமனுவில், தனது பெயரில் 3 கோடியே 84 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இருப்பதாகவும், தனது மனைவி பெயரில் 73 லட்சத்து 68 ஆயிரத்து 562 ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இந்த விவரங்கள் வேட்புமனு தாக்கலின் போது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டன.

## வாக்குக்கு பணம் கொடுப்பவருக்கு எதிராக சிறப்பு பூஜை



மதுரை:ஏப்,06

மதுரை செல்லூரைச் சேர்ந்த சமூக ஆர்வலர் சங்கரபாண்டி, வாக்குக்கு பணம் கொடுக்கும் கலாச்சாரத்தை எதிர்த்து, மதுரை வடக்கு தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார். தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் முறையாக வழங்குவதையும், ஜனநாயகப் படுகொலை செய்வதையும், ஊழல் அரசியல்வாதிகள் ரத்த வாந்தி எடுத்து தேர்தலில் தோல்வி அடைய வேண்டும் என்றும், தேர்தல் நேர்மையாக நடைபெற வேண்டும் என்றும் தத்தனேரி சுடுகாட்டு காளியிடம் சிறப்பு பூஜை செய்வதாக அவர் கூறியுள்ளார்.

# ஆந்திராவில் இருந்து காட்பாடிக்கு கார்களில் 50 கிலோ கஞ்சா கடத்தல் 8 பேர் கைது

## இரண்டு கார் ஒரு இருச்சக்கர வாகனம் பறிமுதல்


வேலூர், ஏப். 5

ஆந்திரா மாநிலம் சித்தூாரில் இருந்து காட்பாடி வழியாக வேலூாருக்கு கஞ்சா கடத்தப்படுவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன் பேரில் காட்பாடி காவல் ஆய்வாளர் தயாளன், உதவி ஆய்வாளர் மணிகண்டன், மற்றும் போலீசார் காட்பாடி அடுத்த கிறிஸ்டியான் பேட்டை சோதனைச் சாவடியில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் ஆதிவேகமாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்ததில் அதில் 25 கிலோ கஞ்சா மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், அதே காரை பின்தொடர்ந்து வந்த மற்றொரு காரையும் நிறுத்தி போலீசார் சோதனை செய்தனர். அதிலும் 25 கிலோ கஞ்சா மூட்டை மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. தொடர்ந்து காரில் இருந்த 50 கிலோ கஞ்சாவையும், காரையும், நோட்டம் பார்த்து வந்த ஒரு இருச்சக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்து காட்பாடி காவல் நிலையம் எடுத்துச் சென்றனர். காரில் இருந்த ஆந்திரா, ராணிப்பேட்டை, காஞ் சிபுரத்தைச் சேர்ந்த 8 பேரையும் கைது செய்தனர். தொடர்ந்து அவர்களிடம் போலீசார் விசாரணை நடத்தி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர்.

# துறையூர் சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் ரவிசங்கர் வேட்பு மனு தாக்கல்

துறையூர் ஏப்04

திருச்சி மாவட்டம் துறையூர் சட்டமன்றத் தொகுதி தவெக வேட்பாளர் ரவிசங்கர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (04042026) தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மணிமாறனிடம் துணை தேர்தல் நடத்தும் அலுவலர், வட்டாட்சியர் சிவகுமார், தேர்தல் வட்டாட்சியர் கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையில் வேட்பு மனு தாக்கல் செய்தார்.2026 தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் துறையூர் தொகுதியில் தமிழக வெற்றிக் கழக திருச்சி புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் ஜெகன்மோகன் தலைமையில் தமிழக வெற்றி கழக வேட்பாளர் ரவிசங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் தனது ஆதரவாளர்களுடன் பாலக்கரையிலிருந்து மேளதாளத்துடன் விசில் அடித்து ஆரவாரத்துடன்



ஊர்வலமாக வந்து வேட்பு மனு தாக்கல் செய்தனர். மண்ணச்சநல்லூரை சேர்ந்த இவர் திருச்சி புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளராக பொறுப்பு வகிக்கிறார். இந்நிகழ்வில் மாவட்ட இணைச் செயலாளர் மதன், துறையூர் தெற்கு நகர செயலாளர் வினோத், வடக்கு நகர செயலாளர் சூர்யா, வழக்கறிஞர் அணி இணை ஒருங்கிணைப்பாளர் எஸ்.எழிலரசி மற்றும் வழக்கறிஞர் பாக்யராஜ், திருச்சி மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆர். கார்த்திகேயன் மற்றும் தாளகா நிர்வாகிகள் தொண்டர்கள் மகளிர் அணியினர் ஏராளமான கலந்து கொண்டனர்.

# பொன்னேரியில் அதிமுக வேட்பாளர் சிறுனியம் பலராமன் வேட்பு மனு தாக்கல்

திருவள்ளூர் ஏப் 5

பொன்னேரி தொகுதி சார்பில் அதிமுக வேட்பாளர் சிறுனியம் பி பலராமன் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். திருவள்ளூர் வடக்கு மாவட்டம் பொன்னேரி அதிமுகவை சேர்ந்த திருவள்ளூர் வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரும் முன்னாள் பொன்னேரி தொகுதி எம்எல்ஏவுமான சிறுனியம் பி பலராமன் அதிமுக வேட்பாளராக வேட்பு மனு தாக்கல் செய்தார். இந்த மனு தாக்கலின் போது பொன்னேரி தொகுதி பொறுப்பாளரும்



முன்னாள் அமைச்சருமான மாஃப பாண்டியராஜன், முன்னாள் எம்எல்ஏ பொன் ராஜா, பாஜக மாவட்ட தலைவர் சுந்தரம் பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் எம் பிரகாஷ் ஆகியோர் உடன் இருந்தனர்

# கன்னியாகுமரி மாவட்டத்தில் தவெக வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல்

கன்னியாகுமரி

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கு வேட்பு மனு தாக்கல் தொடங்கிய நிலையில் தவெக கட்சி சார்பில் கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் வேட்பாளர்கள் இன்று வேட்புமனு தாக்கல் செய்தனர். இதில் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்கு மாதவன் மற்றும் நாகர்கோவில்






சட்டமன்றத் தொகுதிக்கு பெர்லின் கிங்ஸ் ஆகியோர் வேட்புமனுவை தாக்கல் செய்தனர்




தஞ்சாவூர் மாவட்டம் சிவவிடுதி கிராமத்தில் அமைந்துள்ள யாதவ சங்கத்தின் சார்பாக தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வேடநத்தம் கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட மாணவி பிரதீபா அவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறி யாதவா சங்க பொறுப்பாளர் V. P. ராஜசேகர் அவர்கள் ஏற்பாட்டில் ரூபாய் 50,000 நிதி வழங்கினார்கள் இந்நிகழ்வில் தூத்துக்குடி மாநகராட்சி கவுன்சிலர் ராமகிருஷ்ணன் ஒட்டப்பிடாரம் EX ஒன்றிய கவுன்சிலர் கல்மேடு ராஜி லெவிஞ்சிபுரம் பாக்கியா கேப்ஸ் பெரியநாயகம் மற்றும் சிவ விடுதி தோனி. முருகேசன் எம்எஸ்எம். தங்கதுரை, வீரசக்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்

## விழுப்புரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர்

# விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் வேட்புமனு தாக்கல் செய்தார்

விழுப்புரம்

கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் கழக இளைஞர் அணி செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளந்தலைவர் ஆகியோர்களின் நல்லாசியுடன், மீண்டும் விழுப்புரம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுவதற்கு, விழுப்புரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் மாவட்ட பொறுபாபுக்குழு உறுப்பினர் இரா. ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், காங்கிரஸ் கமிட்டி மாவட்ட தலைவர்கள் சிவா, சீனிவாசன், விசிக மாவட்ட செயலாளர் பெரியார், மதிமுக மாவட்ட செயலாளர் பாபு கோவிந்தராஜ், தேமுதிக மாவட்ட தேர்தல் பொறுப்பாளர் ஆதவ




முத்து, மு.சட்டமன்ற உறுப்பினர் ராமமூர்த்தி, சிறிமி மாவட்டத் தலைவர் சௌதிராஜன், மனிதநேய மக்கள் கட்சி மாநில செயலாளர் முஸ்தகதீன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி அப்துல் ஹக்கீம், திராவிட கழக மாவட்ட தலைவர் கோபண்ணா, மமக மாவட்ட செயலாளர் பஜருதீன், மமக மாவட்ட தலைவர் அஸ்கர் அலி, SDPI மாவட்ட தலைவர் முகமது ரபீக் மற்றும் கூட்டணி கட்சி மாவட்ட செயலாளர்கள், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# விஜய் எந்த தொகுதியில் போட்டியிட்டாலும் எதிர்த்து போட்டியிடுவேன் என்று சொன்ன

## சாட்டை துரைமுருகன் அமைதியாக இருப்பது ஏன்

விஜய் எந்த தொகுதியில் போட்டியிட்டாலும் எதிர்த்து போட்டியிடுவேன் என்று சொன்ன சாட்டை துரைமுருகன் அமைதியாக இருப்பது ஏன்? உளவுத்துறை அறிக்கையின்படி சீமான் கட்சிக்கு 3% தான் ஓட்டு கிடைக்கும் என தகவல்.. 234 வேட்பாளர்களும் டெபாசிட் வாங்குவது கஷ்டம்.. அதனால் தான் சாட்டை, சாட்டையை சுழற்றாமல் ஒதுங்கிவிட்டாரோ? தமிழக அரசியலில் தற்போதைய பேசுபொருளாக மாறியிருக்கும் தமிழக வெற்றி கழகத்தின் வருகை, பல அரசியல் கட்சிகளின் வியூகங்களை மாற்றியமைத்துள்ளது. குறிப்பாக, “விஜய் எந்த தொகுதியில் போட்டியிட்டாலும் அவரை எதிர்த்து போட்டியிடுவேன்” என்று முழங்கிய நாம் தமிழர் கட்சியின் முக்கிய பேச்சாளரான சாட்டை துரைமுருகன், தற்போது மௌனம் காப்பது அரசியல் வட்டாரத்தில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. ஆரம்பத்தில் மிகவும் ஆக்ரோஷமாக பேசிவந்த அவர், தேர்தல் நெருங்கும் வேளையில் தற்காப்பு நிலைக்கு சென்றிருப்பது அவரது ஆதரவாளர்களுக்கே வியப்பை ஏற்படுத்தியுள்ளது. விஜய்யின் அரசியல் நுழைவு நாம் தமிழர் கட்சியின் வாக்கு வங்கியை பாதிக்கும் என்ற அச்சம் அக்கட்சியின் முன்னணி நிர்வாகிகளிடையே நிலவி வருவதையே இந்த அமைதி காட்டுவதாக பார்க்கப்படுகிறது. உளவுத்துறை அறிக்கையின்படி, வரவிருக்கும் தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு வெறும் 3 சதவீத வாக்குகள் மட்டுமே கிடைக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த 2024 பாராளுமன்ற தேர்தலில் 8%க்கும் மேல் வாக்குகளை பெற்று வந்த அக்கட்சிக்கு,இந்த முறை பலமான போட்டி நிலவுவதால் வாக்கு சதவீதம் குறையக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, விஜய்யின் கட்சி இளைஞர்களின் வாக்குகளை பெருமளவில் ஈர்க்கும் என்பதால், நாம் தமிழர் கட்சியின் அடிப்படை வாக்கு வங்கியில் சரிவு ஏற்படும் என்று



உளவுத்துறை எச்சரித்துள்ளது. இத்தகைய பின்னடைவை முன்கூட்டியே உணர்ந்து கொண்டதால்தான், சாட்டை துரைமுருகன் போன்றவர்கள் தங்கள் அதிரடி பேச்சுகளை குறைத்து கொண்டார்களோ என்ற சந்தேகம் வலுக்கிறது. தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களை நிறுத்தினாலும், அவர்களில் பெரும்பாலானோர் டெபாசிட் இழக்க நேரிடும் என்ற கசப்பான உண்மை அக்கட்சிக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த தேர்தல்களில் தனித்து போட்டி யிட்டுத் தங்களின் இருப்பை பதிவு செய்தாலும், இந்த முறை களம் மிகவும் சவாலானதாக மாறியுள்ளது. ஒருபுறம் திராவிட கட்சிகளின் பலம், மறுபுறம் பாஜகவின் வளர்ச்சி, இப்போது விஜய்யின் வருகை என மும்முனை தாக்குதலுக்கு இடையே நாம் தமிழர் கட்சி தனது செல்வாக்கை தக்கவைத்து கொள்வது கடினமாகிவிட்டது. டெபாசிட் வாங்குவதே குதிரை கொம்பாக இருக்கும் சூழலில், தேவையில்லாமல் விஜய்யுடன் மோதி தேவையற்ற சர்ச்சைகளை உருவாக்க வேண்டாம் என அக்கட்சி தலைமை அறிவுறுத்தியிருக்கலாம். சாட்டை துரைமுருகனின் இந்த திடீர் அமைதிக்கு பின்னணியில் பல அரசியல் கணக்குகள் இருப்பதாக கூறப்படுகிறது. விஜய்யை தனிப்பட்ட முறையில் விமர்சிப்பது இளைஞர்கள் மத்தியில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அவர் உணர்ந்திருக்கக்கூடும். மேலும், நாம் தமிழர் கட்சிக்கு கிடைக்க வேண்டிய இளைஞர்களின் ஆதரவு சிதறி போவதை தடுக்க, தற்போதைக்கு அமைதியாக இருப்பதே நல்லது என்று அவர் கருதுவதாக தெரிகிறது. “சாட்டையை சுழற்றாமல்” அவர் ஒதுங்கி இருப்பது, அக்கட்சியின் தேர்தல் பரப்புரை வியூகத்தில் ஏற்பட்டுள்ள பெரும் பின்னடைவாகவே அரசியல் விமர்சகர்களால் பார்க்கப்படுகிறது. வீரவசனம் பேசியவர்கள் இப்போது தேர்தல் கள எதார்த்தத்தை எதிர்கொள்ள முடியாமல் திணறி வருகின்றனர். இறுதியாக, 2026 தேர்தல் களம் என்பது வெறும் உணர்ச்சிப்பூர்வமான பேச்சுகளால் மட்டும் வெற்றிபெறக் கூடியது அல்ல என்பதை நாம் தமிழர் கட்சி உணர தொடங்கியுள்ளது. கொள்கை ரீதியான பரப்புரையை விட, வாக்குகளை பெறுவதற்கான பலம் வாய்ந்த கட்டமைப்பு அவசியம் என்பதை விஜய்யின் தவெக நிரூபித்து வருகிறது. உளவுத்துறை அறிக்கையும், கள நிலவரமும் சாதகமாக இல்லாத நிலையில், சாட்டை துரைமுருகன் போன்றவர்களின் அமைதி என்பது தோல்வியை முன்கூட்டியே ஏற்றுக் கொண்டதன் அடையாளமாகவே கருதப்படுகிறது. சாட்டையை சுழற்ற வேண்டிய நேரத்தில் அதனை உறையில் போட்டுவிட்டு அமைதி காப்பது, அக்கட்சியின் எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் ஒரு பெரும் கேள்விக்குறியை ஏற்படுத்தியுள்ளது.

# சோழவந்தான் தொகுதி வேட்பாளர்

## கே மாணிக்கம் உற்சாகம், மக்கள் தந்தனர் அச்சாரம்

மதுரை

சோழவந்தான் சட்டமன்ற தொகுதி வாடிப்பட்டி தெற்கு ஒன்றியத்தில் இன்று மாபெரும் பிரச்சாரத்தை தொடங்கினார் அஇஅதிமுகவின் வேட்பாளர் கே.மாணிக்கம். அவரது தொகுதிக்குட்பட்ட முள்ளிப் பள்ளத்திலிருந்து குருவித்துறை வரை உள்ள அனைத்து கிராமப்புறங்களிலும் உற்சாகத்துடன் வாக்கு சேகரித்தார். மக்கள் அவருக்கு அச்சாரமாக இரட்டை விரலை காட்டி தங்களின் ஆதரவு உங்களுக்கு உள்ளது



என்பது போல் அவரை வரவேற்று மகிழ்ந்தனர். இந்நிகழ்வில் அனைத்து ஒன்றிய செயலாளர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் கட்சித் தொண்டர்கள் ஏராளமான கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்

## ஒசூர் தொகுதி தவெக வேட்பாளர் மாற்றம்



கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தொகுதி தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். கடந்த இரு நாள்களுக்கு முன்பு ஒசூர் தொகுதி வேட்பாளராக தமிழக வெற்றிக் கழகம் சார்பில் அம்ரிஷ் வேட்புமனு தாக்கல் செய்திருந்தார். இந்நிலையில், அவர் மாற்றம் செய்யப்பட்டு வேந்தர்க்கரசன் என்பவர் ஒசூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரியிடம் சனிக்கிழமை வேட்புமனு தாக்கல் செய்தார். அவருடன், மாவட்டச் செயலாளர் வடிவேல் உள்ளிட்டோர் உடனிருந்தனர். ஒசூர் தொகுதிக்கு வேட்பாளராக அம்ரிஷ் என்பவரை தவெக தலைவர் விஜய் அறிவித்த நிலையில், தற்போது மாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சேலம் தொளசம்பட்டி ஸ்ரீ துளசி விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் மழலையர் பட்டமளிப்பு விழா 2026



சேலம் தொளசம்பட்டி ஸ்ரீ துளசி விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 'சிறகடித்துப் பறப்போம்' மழலையர் பட்டமளிப்பு விழா 2026 நடைபெற்றது.

இந்த பட்டமளிப்பு விழாவில் பட்டாம்பூச்சிகளாய் சிறகடித்துப் பறந்த இந்தியாவின் வருங்கால தூண்களான, தங்களது வாரிசுகளின் கண்கொள்ளா இந்த காட்சிகளை கண் இமைக்காமல், ஆனந்தக் கண்ணீர் வடித்து பெருமிதமாக பெற்றோர்கள் பார்த்து ரசித்தனர்.

மேலும் இந்த விழாவில் மாணவ, மாணவிகளின் திறமைகளைவெளிப்படுத்தும்பல்வேறுகலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக மருத்துவர் நாராயணன்(உதவி பேராசிரியர்,அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி), மருத்துவர் பழனிச்சாமி (மேலாளர், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி) கலந்து கொண்டு, மாணவ,மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி பொறுப்பாளர்கள் மற்றும் ஆசிரிய,ஆசிரியைகள், பெற்றோர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில், திமுக வேட்பாளர்.அ.செ. வில்வநாதன் வேட்பு மனு தாக்கல்




திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில், திமுக வேட்பாளர்.அ.செ. வில்வநாதன் அவர்கள் கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் உற்சாகமான ஊர்வலமாக வந்து, வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் பூசன குமார் அவர்களிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

இந்த நிகழ்வில் திமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு ஆதரவை வெளிப்படுத்தினர்.

## அதிமுக வேட்பாளர் கே சி வீரமணி சின்னமோட்டூர் ஊராட்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மேளதாளத்துடன் வரவேற்பு




திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி சின்ன மோட்டூர் ஊராட்சியில் அதிமுக வேட்பாளர் கே.சி.வீரமணி தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள்.அப்போது முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே சாமூர்த்தி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது இதில் கட்சி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும் அவருக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். பல்வேறு நலத்திட்டங்களை எடுத்து கூறி இரட்டை இலைக்கு வாக்கு சேகரித்தார்.






தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், வாக்காளர்கள் தேர்தலில் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் ச.தினேஷ் குமார் விழிப்புணர்வு ஹீலியம் பலூனை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு மேல் பறக்கவிட்டார்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்கும் எண்கள்: கலெக்டர் அறிவிப்பு

காஞ்சிபுரம், ஏப். 6

நடைபெறவிருக்கும் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள எண். 37 .காஞ்சிபுரம், எண்.36.உத்திரமேரூர், எண்.29. திருப்பெரும்புதூர் மற்றும் எண்.28.ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் பணிகளை கண்காணிப்பதற்காக மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு தேர்தல் தொடர்பான புகார்கள், தகவல்கள் மற்றும் சந்தேகங்களை பொதுமக்கள் தெரிவிக்க வசதியாக 247 மணிநேரமும் ஒரு வட்டாட்சியர் தலைமையில் 5 உதவியாளர்களுடன் தேர்தல் கட்டுப்பாட்டு அறை செயல்பட்டுவருகிறது.

பொதுமக்கள் அளிக்கும் தேர்தல் புகார்கள் மூன்று வகையாக தொலைபேசி, வாட்ஸ்அப் மற்றும் மூலமாக பெறப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேர்தல் தொடர்பான புகார்கள் சம்மந்தப்பட்ட இடத்திலிருந்து புகைப்படம், வீடியோ மற்றும் குரல் பதிவு ஆகியவற்றுடன் மூலம் தெரிவிக்கப்படும் புகார்கள் 100 நிமிடங்களுக்குள் தேர்தல் பறக்கும் படைகள் மூலம் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 4 தொகுதிகளிலும் தனித்தனியே 9 பறக்கும் படைக்குழுக்கள் 9 கண்காணிப்பு நிலை குழுக்கள் தொகுதி வாரியாக 24 மணிநேரமும் மொத்தம் (4 தொகுதி18 குழுக்கள்) 72 குழுக்கள் தேர்தல் பணிகளில் ஈடுப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

எனவே, பொதுமக்கள் தங்களது தேர்தல் தொடர்பான புகார்களை 24 மணிநேரமும் னை பதிவிறக்கம் செய்து விதிமீறல்கள் எந்த இடத்தில் நிகழ்கிறதோ அவ்விடத்திலிருந்தே மூலமாக புகார்கள் தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் புகார்களை 100 நிமிடங்களில் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்தில், எண்.37. காஞ்சிபுரம், எண்.36. உத்திரமேரூர், எண்.29. திருப்பெரும்புதூர் மற்றும் எண்.28. ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் விதிமீறல் மற்றும் தேர்தல் தொடர்பான இதர புகார்கள் இருப்பின் , மேற்படி தொலைபேசி எண்கள் மற்றும் வாட்ஸ்அப் எண்கள் மூலம் தெரிவித்தால் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெற அனைவரின் பங்களிப்பை அளித்திட மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## பெரம்பலூர் மற்றும் 148 குன்னம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு நடைபெற்ற இரண்டாம் கட்ட பயிற்சி



பெரம்பலூர், ஏப். 6

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, பெரம்பலூர் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு நடைபெற்ற இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ந.மிருணாளினி பார்வையிட்டார்.

147 பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதி வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு கோல்டன் கேட்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும், 148 குன்னம் சட்டமன்ற தொகுதி வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு மேலமாத்தூர் ராஜவிக்னேஷ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும் இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது. இரண்டு பயிற்சி மையங்களிலும் மாவட்ட கலெக்டர் பார்வையிட்ட ஆய்வு செய்தார்.

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள 387 வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 345 வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பணியாற்றவுள்ள வாக்குப் பதிவு அலுவலர்களுக்கு, அந்தந்த பகுதிகளின் மண்டல அலுவலர்களால் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சி வகுப்புகள் 28.03.2026 அன்று நடத்தப்பட்டது. பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்கான 40 மண்டல அலுவலர்களும், குன்னம் சட்டமன்ற தொகுதிக்கான 35 மண்டல அலுவலர்களும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு இன்று இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பெடுத்தனர்.

இந்த பயிற்சி வகுப்பில், வாக்குப்பதிவு நாளன்று கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள், வாக்குப்பதிவு தொடங்கும்போதும், முடிவுறும்போதும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக அந்தந்த தொகுதிக்கு நியமிக்கபட்டுள்ள மண்டல அலுவலர்கள் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களையும், கருவிகளையும் எவ்வாறு கையாள்வது என்பது குறித்து மாதிரி கருவிகளை வைத்து விரிவாக எடுத்துரைத்து பயிற்சி அளிக்கப்பட்டது. வாக்குப்பதிவின் பொது ஏதேனும் தொழில் நுட்ப கோளாறுகள் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும், மாதிரி வாக்குப்பதிவு எப்படி நடத்த வேண்டும் என்பன போன்ற பல்வேறு பயிற்சிகள் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மு.அனிதா (பெரம்பலூர்), சக்திவேல் (குன்னம்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சொர்னராஜ், வட்டாட்சியர்கள் சத்திய மூர்த்தி (பெரம்பலூர்), சின்னதுரை (குன்னம்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## கரூர் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் சைக்கிளிங், வாக்கிங் பேரணி: தேர்தல் அலுவலர், கலெக்டர் துவக்கி வைத்தார்



கரூர், ஏப். 6

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப் பின்படி, கரூர் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளிலும் சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு 23.04.2026 அன்று நடைபெறவுள்ளதை யொட்டி, 100% வாக்குப்பதிவினை வலியுறுத்தியும், வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள், பேரணிகள், கோலங்கள், வாக்காளர் உறுதி மொழி உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

135 கரூர் சட்டமன்றத் தொகுதியில் 100% வாக்கு வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கரூர் சட்டமன்றத் தொகுதி கரூர் மாநகராட்சி அலுவலகத்தில் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்வாக கரூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் கரூர் மாவட்டத்தில் உள்ள 18 வயது பூர்த்தி அடைந்த அனைவரும் வாக்களிப்பதற்கு ஏதுவாக விழிப்புணர்வுசைக்கிளிங் பேரணி கரூர் மாநகராட்சி அலுவலகத்திலிருந்து துவங்கி கரூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் முடிவுற்றும், வாக்கிங் பேரணி கரூர் மாநகராட்சி அலுவலகத்திலிருந்து துவங்கி லைட்ஹவுஸ் பேருந்து நிலையம் வரையிலும், முன்னதாக சிலம்பம் விளையாடி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் சுமார் 300க்கு மேற்ப்பட்ட மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கரூர் தேர்தல் நடத்தும் அலுவலர் சக்திய பாலகங்தாதரன், மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, திட்ட இயக்குநர் (மகளிர்த்திட்டம்) தனசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) தேன்மொழி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மோகன்ராஜ், மாவட்ட விளையாட்டு அலுவலர் ஜே. டேவிட் டேனியல் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எட்டையாபுரம் பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசு மகளிர் பல்வகை தொழில் நுட்பக் கல்லூரி அருகில் நிலையான கண்காணிப்பு குழுவினர் வாகனச் சோதனையில் ஈடுபட்டு வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் விஷு மகாஜன் பார்வையிட்டார்.

## 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த வாக்காளர் விழிப்புணர்வு மாரத்தான்: மாவட்ட தேர்தல் அலுவலர், கலெக்டர் துவக்கி வைத்தார்



தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த வாக்காளர் விழிப்புணர்வு மாரத்தானை துவக்கி வைத்து பங்கேற்றார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 101 தாராபுரம் (தனி), 102 காங்கேயம், 112 அவிநாசி( தனி), 113 திருப்பூர் (வடக்கு), 114 திருப்பூர் (தெற்கு), 115 பல்லடம், 125 உடுமலைப்பேட்டை, 126 மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெறவுள்ளதை யொட்டி மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த வாக்காளர் விழிப்புணர்வு மாரத்தானை துவக்கி வைத்து பங்கேற்றார்கள். இப்பேரணியில் 1000 மேற்பட்ட வீரர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றார்கள். இப்பேரணியானது மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தொடங்கி முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையம் வரை சென்று மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முடிவடைந்தது.

இந்நிகழ்வின்போது, மாநகர காவல் ஆணையாளர் எஸ்.ராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஷ் அசோக் , மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மாநகர துணை காவல் ஆணையர்; பிரவீன் கௌதம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு.சதீஸ்குமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் அரவிந்த் குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவி இயக்குநர் (பயிற்சி) செல்வி ஹர்ஷா, அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஜெகதேவி கிராமத்தில் திமுக பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம்



கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் தெற்கு ஒன்றியம் ஜெகதேவி கிராமத்தில் திமுக பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ. கே .கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், வருகின்ற சட்டமன்ற தேர்தல் பணிகள் எப்படி பணியாற்றுவது , தமிழ்நாடு முதலமைச்சர் இரண்டாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும், பர்கூர் வேட்பாளர் தே. மதியழகன் 50,000 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும். இதுதான் நம் குறிக்கோள். நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு வெற்றி பெற பணியாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர் அறிஞர் முன்னிலை வகித்தார். மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் எஸ். பாலாஜி, ஒன்றிய துணை செயலாளர்கள் ராஜதுரை,சுமேஷ், தகவல் தொழில்நுட்ப பிரிவு துணை அமைப்பாளர் அருண், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் விக்னேஷ், ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் ரூபேஷ், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் நெடுஞ் செழியன் உள்பட ஏராளமான பாக முகவர்கள் ஒன்றிய மாவட்ட நிர்வாகிகள், பிஎல்ஏ2 பிஎல்ஏசி ஆகிய நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்

# கவரப்பேட்டையில் கும்மிடிப்பூண்டி தொகுதி திமுக செயல் வீரர்கள் மற்றும் கழக வேட்பாளர் அறிமுக கூட்டம்




திருவள்ளூர் ஏப் 5

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி திமுக செயல்வீரர்கள் மற்றும் கழக வேட்பாளர் அறிமுக கூட்டம் கும்மிடிப்பூண்டி அடுத்த கவரப்பேட்டை பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம் எஸ் கே ரமேஷ் ராஜ் தலைமை தாங்கினார் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் கி வேணு ஆனந்த், மேற்கு ஒன்றிய செயலாளர் மு. மணிபாலன், பூண்டி ஒன்றிய செயலாளர் டி கே சந்திரசேகர், கிழக்கு ஒன்றிய செயலாளர் ந. பரிமளம், எல்லாபுரம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆ.சக்திவேல், பூண்டி வடக்கு ஒன்றிய செயலாளர் பொன்னுசாமி, ஊத்துக்கோட்டை பேரூர் செயலாளர் அபிராமி குமரவேல், கும்மிடிப்பூண்டி பேரூர் கழக செயலாளர் இரா.அறிவழகன், ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினர். மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன், மாவட்ட துணை செயலாளர்கள் கே.ஜி.வி.உமா மகேஸ்வரி வேணு, மு.கதிரவன், மாவட்ட பொருளாளர் எஸ்.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.வெங்கடா ஜலபதி, பா.செ.குணசேகரன், உள்ளிட்ட பலர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கழக செய்தி தொடர்பு செயலாளர் டி.கே. எஸ்.இளங்கோவன் கலந்து கொண்டு கும்மிடிப்பூண்டி தொகுதி கழக வேட்பாளர் டி.ஜெ.கோவிந்த ராஜனை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் தலைமை செயறகுழு உறுப்பினரும் முன்னாள் எம்எல்ஏவுமான டி.ஜெ.கோவிந்தராஜன்,முன்னாள் எம்எல்ஏ சி.எச்.சேகர்,மற்றும் கூட்டணி கட்சி மாவட்ட நிர்வாகிகள் என பலர் சிறப்புரை யாற்றினர்.இக் கூட்டத்தில் மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்,கிளை கழக, வார்டு கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட துணைச் செயலாளர் எம்.எல்.ரவி நன்றி கூறினார்.

# ரிஷிவந்தியம் தொகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் வசந்தம் கார்த்திகேயன்



கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி மாவட்டம் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் ரிஷிவந்தியம் தொகுதியில் போட்டியிடும் மதச்சார்பற்ற ஜனநாயக கூட்டணி கட்சியின் சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் வசந்தம் கார்த்திகேயன் தனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்கராபுரம் வடக்கு ஒன்றியம், பொரசப்பட்டு ஊராட்சியில் நேற்று காலை வீடு வீடாக பொதுமக்களை நேரில் சந்தித்து தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார்

# துறையூரில் அதிமுக வேட்பாளர் சரோஜா இளங்கோவன் வேட்புமனு தாக்கல்



துறையூர் ஏப்04

திருச்சி மாவட்டம் துறையூர் சட்டமன்றத் (தனி) தொகுதியில் அதிமுகவேட்பாளர் சரோஜா இளங்கோவன் வேட்பு மனு தாக்கல் செய்தார்.2026 தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் அதிமுக வேட்பாளர் சரோஜா இளங்கோவன் தனது ஆதரவாளர்களுடன் சிலோன் ஆபீஸ் பகுதியில் இருந்து ஆஸ்பத்திரி ரோடு, திருச்சி ரோடு வழியாக மேளதாளத்துடன் ஊர்வலமாக வந்து வட்டாட்சியர் அலுவலகத்தில் துறையூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மணிமாறனிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். பொது தேர்தல் பார்வையாளர் பிஜய் குமார் தாஸ், துணை தேர்தல் நடத்தும் அலுவலர் வட்டாட்சியர் சிவகுமார், தேர்தல் வட்டாட்சியர் கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் சரோஜா,முன்னாள் எம்எல்ஏ இந்திரா காந்தி, அதிமுக நகர செயலாளர் அமைதி பாலு, ஒன்றிய செயலாளர்கள் பொன் காமராஜ் ,வெங்கடேசன், செல்வராஜ், நகர அவைத் தலைவர் ரவிவர்மா நகர்மன்ற உறுப்பினர் தீனதயாளன், எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் கவிதை மணி, வழக்கறிஞர்கள் கார்த்திகேயன், மாவட்ட பிரதி நிதி மருதமுத்து,அமமுக பீரங்கி சுப்ரமணியன், ஐஜேகே பாஸ்கர், பாஜக ராதாகிருஷ்ணன், வழக்கறிஞர்கள் கார்த்திகேயன், செந்தில்குமார், ராமசாமி, இளைஞர் அணி விவேக், விவசாய அணி விஜயரங்கன், ஐடி விங் தினேஷ், கணேஷ் மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள பாமக, தமாகா உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்

# ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் அஇஅதிமுக வேட்பாளர் வேட்பு மனு தாக்கல்



ராணிப்பேட்டை

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் அஇஅதிமுக மேற்கு மாவட்ட செயலாளர் ஆற்காடு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் எஸ்.எம்.சுகுமார் ஆற்காடு சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் ஏகாம்பரம் அவர்களிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.உடன் பிஜேபி கட்சி மாவட்ட தலைவர் ஆனந்த், பாட்டாளி மக்கள் கட்சி இளவழகன், ஆற்காடு நகர செயலாளர் ஜிம் சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானவர் கலந்து கொண்டனர்.




கள்ளக்குறிச்சி சட்ட மன்ற தொகுதி விசிக வேட்பாளர் மாலதி தனது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்தார்




கள்ளக்குறிச்சி சட்ட மன்ற தொகுதி தவெக வேட்பாளர் அருள் விக்னேஷ் தனது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்தார்



கள்ளகுறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தொகுதி திமுக கூட்டணி வேட்பாளர் ஜி ஆர் வசந்தவேல் தேர்தல் நடத்தும் அலுவலர் செந்தில் குமாரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட செயலாளர் உதயசூரியன் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சந்திரசேகரன் உட்பட்ட பலரும் உடன் இருந்தனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு அரசியல் விளம்பரங்கள், கட்டண செய்தி வெளியிடுதல் மற்றும் வாக்குப்பதிவு, வாக்கு எண்ணும் மையங்களில் ஊடகங்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்.சுப்புலெட்சுமி தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மா. சிவசுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) .பாஸ்கரன், சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) .ரமேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.கதிரவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CALL: 044-22772060,9443699066